# தமிழணங்கு

(தமிழராய் இணைவோம்)

மலர்-3 பிப்ரவரி – 2025 இதழ்-8



**சிறப்பாசிரியர்**
பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி

**நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்**
முனைவர். திருமதி செ. இராஜேஸ்வரி

**பொறுப்பாசிரியர்**
முனைவர். சந்திரிகா சுப்பிரமணியன்

**ஆசிரியர் குழு**
கிங்ஸ்டன் ஜெகநாதன் (இந்தியா)
தேமொழி (அமெரிக்கா)
அன்பு ஜெயா (ஆஸ்திரேலியா)
மின்னச்சன் இங்கர்சால் (நோர்வே)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

**வடிவமைப்பு**
C. சந்திர விமல் M.A., B.Ed



தனி இதழ் ............................................ ரூ 120
அரையாண்டு சந்தா ................................ ரூ 600
ஆண்டு சந்தா........................................ ரூ 1200

Google Pay / Phone Pay மூலம் செலுத்த
+91 7010997639

**Thamizhanangu**

Printed & Published by
E. Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madurai,
Tamil Nadu 625 018.
Ph: +91 7871123226, +91 7010997639

கட்டுரைகள் அனுப்புவோர்
rajetamiljuly1@gmail.com
thamizhanangu1@gmail.com க்கு அனுப்பவும்



இவ்விதழில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அந்த கருத்துக்களுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

- இதழ் ஆசிரியர்



# உள்ளடக்கம்


1. காலதேவன் வழிபாடு
   - முனைவர் செ. இராஜேஸ்வரி
2. பெயரெச்சம் ஆய்வு II
   - பேரா. கு. இராமகிருட்டினன்
3. குலதெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் : சிறுதெய்வங்களை முன்வைத்து...
   - முனைவர் ச. சீனிவாசன்
4. இனக்குழுக்கள் – பேரரசு – இறைக் கோட்பாடு
   - முனைவர் சிவ. இளங்கோ
5. பாரதியும் இதழ்ப் பணியும்
   - திரு. மா. சிவஞானம்
6. இராவணன் கண்ட சிந்தாமணி மருத்துவம்
   - அண்ணாமலை சுகுமாரன்
7. சோழர் கால ஓவியங்கள் – 9
   - மாரிராஜன்
8. உளவியல் நோக்கில் கூனி
   - முனைவர் சு. வினோத்
9. மதுரகவி ஆழ்வார்
   - ஜனக்புரி சீனிவாசன்
10. *Gene Notes in Vengai Anchor – I*
   - *Dr. C. Rajeswari*
11. தமிழ் அச்சுக் கலைத் தந்தை ஆண்டிரிக்கசு அடிகளார்
   - முனைவர் மோ. மைக்கேல் பாரடே
12. திருக்குறள் அறிந்ததும் அறியாததும்
   – மாரிராஜன்
13. புதைப்பிடங்கள் - தாமிரபரணி நாகரிகமும் சுமேரிய நாகரிகமும்
   - முனைவர் மெய். சித்ரா
14. தவறின்றித் தமிழ் எழுதுவோம்
   - டாக்டர் புதேரி தானப்பன்
15. எளிய முறையில் யாப்பறிவோம்
   - நெருப்பலையார் இராம. இளங்கோவன்



Scanned with OKEN Scanner

# குலதெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் : சிறுதெய்வங்களை முன்வைத்து...



**முனைவர் ச. சீனிவாசன்**
(தமிழக அரசின் சிறந்த நூல் மற்றும் நூலாசிரியர் விருதாளர்)
பேராசிரியர் & தலைவர்
தமிழ்த்துறை, ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி
(தில்லிப் பல்கலைக்கழகம்)
புது தில்லி-110 021, இந்தியா.

மின்னஞ்சல் : *drseenivasan@gmail.com*

## இயற்கை வழிபாடு முதல் குலதெய்வ வழிபாடு வரை

'ஆதிகாலத்தில் இயற்கையைச்சார்ந்து வாழ்ந்த மனிதன் பின்னர் அதனை நம்பி வாழ்ந்தான். இயற்கை மீது கொண்ட நம்பிக்கையின் விளைவாக ஏற்பட்ட நன்மைகளின் பயனாக இயற்கையை வணங்க ஆரம்பித்தான். மனிதனின் ஆவி வழிபாடு அவனது முன்னோர்களின் இறப்பிலிருந்து தொடங்கியது.

பின்னர் விலங்கு மற்றும் பறவை இனங்களைத் தங்கள் குலக்குறிகளாகக் கொண்டு வழிபடத் தொடங்கினான். தொடர்ந்து இயற்கை கடந்த ஆற்றல்கள் கொண்ட பொருட்களுக்கு அதீத ஆற்றல் இருப்பதாக நம்பி அவற்றை வழிபட்டான். பின்னர் இறந்தவர்களுக்கு நடுகல் நட்டு முன்னோர் வழிபாட்டைத் தொடங்கினான். இயற்கையாக இறந்த முன்னோர்களை அக்குடும்ப உறுப்பினர்கள் நினைவுகூர்ந்து வழிபடுவது முன்னோர் வழிபாடாக நீடித்தது. முன்னோர் வழிபாடு நாளடைவில் குலதெய்வ *(Clan Deities)* வழிபாடாக மாறியது.

குலதெய்வ வழிபாடு சிறு தெய்வ வழிபாட்டின் ஒரு கூறாகும். தமிழ் நாட்டின் பெருவாரியான மக்கள் சிறுதெய்வங்களை வழிபடுகின்றவர்களாக இருக்கின்றனர். இயற்கையாலன்றி பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார காரணங்களால் திடீரென்று இறந்தவரை (தற்கொலை, போர், கொலை, விபத்து போன்றவற்றால் இறந்தவரை) தெய்வமாக வழிபடுவதுதான் குலதெய்வ வழிபாடு என்று வரையறுக்கிறார் மாற்கு. தமிழர்கள் வழிபடும் குலதெய்வங்கள் பெரும்பாலும் கொலையால் தோன்றியவை என்று நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.



Scanned with OKEN Scanner